# Gospel Truth
# காஸ்பல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளின் ஊக்குவிப்பிற்கான வேதாகம விளக்கங்கள்

Issue - 5 — For Private Circulation Only — இதழ் -5


## இதோ, சீக்கிரமாய் வருகிறேன்

நாங்கள் தந்திரமான கட்டுக் கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே நம்முடைய **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்** வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம்.அதிக உறுதியான தீர்க்கதரின வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப் போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும் (2 பேது 1 : 16, 19).

கடந்த 100 வருடங்களாக மிகத்துல்லியமாக நிறைவேறிக் கொண்டிருக்கிற ஏறக்குறைய 2000 தீர்க்கதரிசன வார்த்தைகளைச் சார்ந்து, அதை விசுவாசித்த கிறிஸ்தவர்களாகிய நம் வாழ்வு கட்டப்பட்டிருக்க வேண்டும்.மாறாக நீதிக்கதைகளையோ, கட்டுக்கதைகளையோ நம்பி அதைச் சார்ந்து வாழக்கூடாது.மேசியாவாகிய இயேசுகிறிஸ்துவின் பிறப்பு, வாழ்க்கை, அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைக் குறித்து தீர்க்கதரிசனங்கள் ஏற்கனவே முன் அறிவிக்கப்பட்டிருந்தன.இவை யாவும் அறிவியல் சார்ந்த நம்பகத் தன்மைக்கு அப்பாற்பட்டது.வேதத்தில் சொல்லப்பட்டுள்ள சம்பவங்கள் ஒவ்வொன்றும் அவை முன் அறிவித்தபடியே நடந்தேறியது. எழுதப்பட்ட எல்லாவிதமான புத்தகங்களைக் காட்டிலும் வேதமே விலையேறப்பெற்றதும், விசுவாசிக்கத் தக்கதும், வல்லமை நிறைந்ததும், அதிலுள்ள வார்த்தைகள் ஒவ்வொன்றும் கிரியை செய்கிறதுமாயிருக்கிறது.



### தாமதிக்காதே! உன் ஆத்துமாவை நித்தியத்துக்கென்று ஆயத்தப்படுத்து

உலகத்தின் கடைசி நாட்களைக் குறித்ததான சில தீர்க்கதரிசனங்கள் இன்னும் நிறைவேற வேண்டிய திருக்கிறது.வரப்போகிற காரியங்களை வெளிப்படுத்துகிற வேதம் என்பது எவ்வளவு விலையேறப்பெற்ற, நம்பகமான ஒரு சான்றாக இருக்கிறது என்பதை விளங்கிக் கொள்ளுங்கள். ஆபத்தான நேரம் இந்த பூமியின்மேல் வரப்போகிறது.தீர்க்கதரிசன வார்த்தைகள் நிறைவேறுங்காலம் சமீபமாயிற்று.இந்த உலகமானது மிகவும் மோசமான பொல்லாங்குகளிலே வளர்ந்து வருகிறது. காலத்தின் அடையாளங்கள் நமக்கு உணர்த்துவது இவ்வுலகம் வெகுநாட்கள் இருக்கப் போவதில்லை. இது கடைசி நாட்களின் இறுதி வேளை. காலம் சமீபமாயிற்று. இயேசுகிறிஸ்து திரும்பவும் வரப்போகிறார். அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார் (மத் 16 : 27). அவருடைய முதலாம் வருகையைக் குறித்ததான தீர்க்கதரிசனங்கள் எவ்விதம் நிறைவேறியதோ, அதேபோல அவருடைய இரண்டாம் வருகையைக் குறித்ததான தீர்க்கதரிசனங்களும் நிறைவேறப் போகிறது.

மனிதர்களாகிய நாம் அனுதின வாழ்க்கையிலே ஓடிக் கொண்டேயிருக்கிறோம். நித்தியத்தைக் குறித்ததான பயமில்லாமல், தேவனை விட்டு விலகி, பாவத்திற்குள்ளாகவே வாழ்ந்து வருகிறோம்.கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும் (2 பேது 3 : 10). சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும் (2 கொரி 5 : 10).


| தலையங்கம் | வேதாகம வழிகாட்டி | கடைசிக்காலம் | கேள்விக்கென்ன பதில் | உங்களுக்குத் தெரியுமா? |
|---|---|---|---|---|
| பக்கம் - 3 | பக்கம் - 4 | பக்கம் - 5 | பக்கம் - 7 | பக்கம் - 8 |

# வேதாகமம்




## நமக்கு போதிப்பது என்ன.....

**தேவனுடைய வார்த்தை**

2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ;

மத் 24 : 35

**அன்பு**

மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23,

1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**

அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**

யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4,

எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**

1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**

அப் 1 : 8 ; 15 : 8-9 ; 19 : 2

**பரிசுத்தம் :**

லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1:15-16 ;

தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**

லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ;

1 கொரி 12 : 12-13 ; கொலோ 1:18

**ஒற்றுமை**

யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ;

வெளி 18 : 2-4 ;

**நியமங்கள்**

மத் 28 : 19-20 ; 26 : 26-30 ;

1 கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**

லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**

மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ;

1 கொரி 7 : 10, 11 ;

**வெளிப்புற தோற்றம்**

1 தீமோ 2 : 9-10 ; 1 கொரி 11 : 14-15 ;

உபா 22 : 5

**கடைசிகாலம்**

2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28,29 ;

2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**

யோவா 4 : 23,24 ; எபே 5 : 19 ;

2 கொரி 3 : 17 ;

**சுவிசேஷம் அறிவித்தல்**

மாற் 16 : 15 ;

தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் (2 பேது 3 : 9) . அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில் இதோ வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டு பேர் அவர்களருகே நின்று இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள் (அப்போ 1:11) . இயேசுகிறிஸ்து மறுபடியும் வரப்போகிறார்.

அவர் வரும்போது, நமக்கு மனந்திரும்ப நேரம் கொடுக்கப்படமாட்டாது.ஜெபிக்க நேரமிராது, மனம் மாற நேரமிராது.நீ அவருடைய நியாயாசனத்திற்கு முன்பாக அப்படியே வெளிப்பட வேண்டும்.இதோ சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது (வெளி 22 : 12).இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளை கவனித்தீர்களா? இதோ நான் சீக்கிரமாய் வருகிறேன். பாவமுள்ள இந்த உலகத்திற்கு காலம் கடைசிகாலமாயிற்று.கடனாய் கொள்ளப்பட்ட மிகச் சொற்பமான காலத்துக்குள்தான் இந்த உலகம் உள்ளது என்பதை தேவனாகிய இயேசுகிறிஸ்துவினுடைய முந்தைய நியாயத்தீர்ப்புகளிலிருந்து நாம் அறிகிறோம்.இனி காலம் செல்லாது.நாளை என்பது நிச்சயமல்ல.உன் தேவனை சந்திக்க நீ ஆயத்தமா?

**கர்த்தராகிய இயேசுகிறிஸ்து** சீக்கிரமாய் திரும்பவும் வரப்போகிறார். தாமதியாதேயுங்கள். உங்கள் ஆத்துமாவை நித்தியத்துக்கென்று ஆயத்தம் பண்ணுங்கள்.இதோ இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள் (2 கொரி 6 : 2) . நீங்கள் இரட்சிக்கப்படாவிட்டால்,இதுவே உங்களுக்கான தருணம்.இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினாலே கழுவப்பட்டு இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## காஸ்பல் ட்ருத்

கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம்.கிறிஸ்துவின் நாட்கள் தொடங்கி அப்போஸ்தலர்கள் காலமட்டும் பிரசங்கித்து வந்த கிறிஸ்துவின் சத்தியத்தையே நாங்களும் இந்த இதழ் வாயிலாக அறிவிக்கிறோம்.

கர்த்தரின் வசனமே விசுவாசத்திற்கு ஊன்றுகோலாகும்.அதுவே பாவமன்னிப்பின் நிச்சயத்தையும், இரட்சிப்பையும் நமக்குத் தருகிறது.பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலும், வல்லமையும், அனுதின வாழ்வின் பரிசுத்தமும் நம்மில் வளர வழி வகுக்கிறது.சத்தியத்தின்படி அன்பை போதித்து கர்த்தருக்குள் வழி நடத்த பிரயாசப்படுகிறோம்.

## இணையதள சேவை

எங்களுடைய இந்த இதழை ஆன்லைனில் படிக்க ***www.thegospeltruth.org*** என்ற இணையதள முகவரியை பார்க்கவும்.மேலும் உங்களது ***E.mail*** மூலமாகவும் எங்களோடு தொடர்பு கொள்ளலாம்.உங்களது நண்பர்கள் மற்றும் தெரிந்தவர்களுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

## தொடர்புக்கு

தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். தேவ சபையின் மூலமாய் நடைபெறும் அனைத்து வகையான ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.உங்களது கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம்.

**ஆசிரியர்.டபிள்யூ.எஸ்.வேதா, காஸ்பல் ட்ருத், 2/227 - கோலார்பட்டி பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**



# தலையங்கம்

"இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது " (வெளி 3 : 11) .

சில மாதங்களாக நான் ஆழமாக ஆவிக்குள்ளாக்கப்பட்டு, ஜெபிக்கும்போது இந்த பூமியில் நம் வாழ்வு சீக்கிரமாக முடிவுக்கு வரப்போகிறது.கர்த்தர் அவரது வருகையை இனியும் தாமதிக்கமாட்டார் என்று இயேசுகிறிஸ்துவின் வருகையைக் குறித்ததான இந்த செய்தி என்னை தூண்டுகிறது. நான், **ஜீசஸ் பென் அனனியாஸ்** (JESUS BEN ANANIAS) என்று ஒரு தீர்க்கதரிசியை இப்போது நினைவுபடுத்துகிறேன்.அவர் எருசலேம் நகரத்தின் தெருக்களில் நடந்து செல்லும்போது நகரத்திற்கு தேவன் கொண்டுவரப்போகிற அழிவிலிருந்து காக்கும்படி அழுது மன்றாடினார்.

ஓ...ஓ..எருசலேம் என அழுதார்.ஜனங்கள் அவரைப் பார்த்து பைத்தியம் என்று சொல்லி அவரை அமைதிப்படுத்தினர். எருசலேம் நகரமானது, செழிப்புடனும், சமாதானத்துடனுமே காணப்படுகிறது.ஆனாலும் இவர் அழுகையை நிறுத்தவே இல்லை.

ஓ...ஓ கிழக்கு திசையிலிருந்து ஒரு சத்தம்.ஓ...ஓ மேற்கு திசையிலிருந்து ஒரு சத்தம்.நான்கு திசையிலிருந்தும் சத்தம் எருசலேமுக்கு எதிராக ஒலித்துக்கொண்டேயிருந்தது.அவர் 7 வருடங்களும் 5 மாதங்களுமாக தீர்க்கதரிசனமாக முன்அறிவித்திருந்தார். அந்த தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.எருசலேமுக்கு பேராபத்து நேரிட்டது.

ஜனங்கள் எல்லாம் இந்த வார்த்தை நிறைவேறியதைக் கண்டு சோர்ந்து போனார்கள்.ஆனால் நான் அந்த தீர்க்கதரிசி அனனியாசைப் போல இருக்க விரும்புகிறேன்.இனி காலம் செல்லாது.தேவனாகிய இயேசுகிறிஸ்து வெகுசீக்கிரமாக வரப்போகிறார். உண்மையுள்ளவர்களாய் துரிதமாக அவர் வருகைக்கு ஆயத்தப்படுங்கள். ஒவ்வொரு நாளும் இதுவே கடைசிநாள் என எண்ணி வாழுங்கள்.ஏனெனில் அவர் சீக்கிரமாக வரப்போகிறார். உண்மையுள்ளவர்களாய் துரிதமாக அவர் வருகைக்கு ஆயத்தப்படுங்கள்.ஒவ்வொரு நாளும் இதுவே கடைசி நாள் என எண்ணி வாழுங்கள்.ஏனெனில் அவர் சீக்கிரமாக வருகிறார்.இந்த உலகம் சாத்தானின் பிடியினில் மிகவும் மோசமாகிக் கொண்டே செல்கிறது.ஆனாலும் இன்னும் நாம் பரிசுத்தமாய் வாழும் வல்லமை இயேசுகிறிஸ்துவினிடத்தில் உண்டு.நாம் சிலுவையை நெருங்கிச் சேரக்கடவோம்.

இந்த இதழில் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும், உலகத்தின் கடைசி நாட்களையும் குறித்து விரிவாக எழுதியுள்ளேன். பொதுவாக இதைக் குறித்ததான தவறான வழிகாட்டுதலும், கொள்கைகளும் காணப்படுகிறது. ஆனால் நாம் தேவனுடைய சத்திய வார்த்தைகளை சரியாகப் பகுத்தறிந்து உணர்ந்து கொள்ள வேண்டும்.தவறுகளை எதிர்கொள்ள ஒரே வழி சத்தியம் மாத்திரமே.இது பெரிதான ஒரு விளக்கம்.ஆயினும் இடம் இல்லாத காரணத்தினால் அனைத்து வேத சத்தியங்களையும் இதில் விவரிக்க முடியவில்லை.அதேபோல வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்டுள்ள பலவிதமான தீர்க்கதரிசனங்கள் அடங்கிய வசனங்கள் கடைசிகாலம் என்கிற வார்த்தையை போதிப்பதில் நமக்கு சிறு சிறு சந்தேகங்களை கொண்டுவரும்.

ஆகவே ஒரு வார்த்தையை தெளிவாகவும், எளிமையாகவும் போதித்து, உணர்ந்துகொண்டு,பின் அதன் வழிகாட்டுதலின்படி வெளிப்படுத்தின விசேஷத்தில் அடையாளமாய் சொல்லப்பட்டுள்ள தீர்க்கதரிசனங்களைப் புரிந்துகொள்ளலாம் . சில காரியங்களை தேவன் நமக்கு முழுவதுமாய் வெளிப்படுத்தாமல் நிறுத்தி வைத்திருக்கிறார். ஆனால் அவர் கொடுத்த போதனைகள் நம்மைப் பரலோகத்துக்கு கொண்டுச் செல்ல போதுமானது.பல்லாயிரக்கணக்கான மக்கள் இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்தைக் குறித்த தவறான உபதேசங்களால் ஏமாற்றப்படுகிறார்கள். இதனால் அவர்கள் தங்கள் முழு இருதயத்தோடு தேவனைத் தேட மறந்து போகிறார்கள்.

**காஸ்பல் ட்ரூத்** மற்றும் அனைத்து ஊழியங்களுக்காகவும் தொடர்ந்து தேவனுடைய வழிநடத்துதல் இருக்கும்படி ஜெபித்துக்கொள்ளுங்கள்.தினமும் அவருடைய வேலையைச் செய்ய ஆவியானவரின் வழிகாட்டுதலைச் சார்ந்தே நாங்கள் நிற்கிறோம்.

இனி காலம் செல்லாது.இயேசுகிறிஸ்து சீக்கிரமாய் வரப்போகிறார்.

**ஆன்லைனில்**

**அதிகமாக தெரிந்துகொள்ள**

***www.thegospeltruth.org***



## விட்டுவிடுவாரோ?

ஆனந்தபரவசமாய் இந்த செய்தி காட்டுத்தீ போல் உலகம் முழுவதும் பரவிக் கிடக்கிறது. எடுத்துக் கொள்ளப்படுதல் என்ற வார்த்தையானது பிடிக்க அல்லது எடுத்துச்செல்ல என பொருள்படும். நிறைய கிறிஸ்தவர்களின் நம்பிக்கையானது, இயேசுகிறிஸ்து வரும்போது நீதியுள்ளவர்களை மட்டுமே எழுப்பி, தம்முடன் பரலோகத்துக்கு அழைத்துச் செல்வார் என்பதாகும்.

அநீதியுள்ளவர்களை இந்த பூமியிலே விட்டுவிடுவார் 1 தெச 4 : 16-17 வசனங்கள். ஏனெனில், கர்த்தர்தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்.

அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள் மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

பவுல் அப்போஸ்தலன் இவ்வாறாக கூறுகிறார்.சகோதரரே ஒருவரையொருவர் தேற்றுங்கள்.அவர் அநீதியுள்ளவர்களின் நிலையைக் குறித்துக் கூறவில்லை.பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும் ( யோவான் 5 : 28 -29). ஒரே உயிர்த்தெழுதலும், ஒரே நியாயத்தீர்ப்புமே. ஒருவரையும் விட்டுவிட மாட்டார். அனைவரும் அவருக்கு முன்பாக நிற்க கடவோம்.

# வேதாகம வழிகாட்டி

**பொருள் : காலயியல் - கடைசி காலத்தைப்பற்றிய வேதாகம விளக்கங்கள்**

**வேத வாசிப்பு**

யாக்கோபு 5 : 8 - நீங்களும் நீடியபொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள். கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே.

இயேசுகிறிஸ்து இரண்டாம் வருகையில் இந்த பூமிக்கு வரும்போது, மரித்தவர்கள் யாவரும் உயிர்த்தெழுந்து, நியாயத்தீர்ப்புக்காக அவருக்கு முன்பாக நிற்கக் கடவோம். பூமியானது அழிக்கப்பட்டு நீதியுள்ளவர்கள் பரலோகத்திலும், அநீதியுள்ளவர்கள் நரகத்திலும் தள்ளப்படுவார்கள்.

**I.இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை**

A.யோவான் 14 : 28 திரும்பி உங்களிடத்தில் வருவேன்
B.அப்போ 1 : 9-11 மறுபடியும் வருவார்
C.1தெச 5 : 2 திருடன் வருகிறவிதமாய்
D.மாற்கு 13 : 32 அக்காலத்தை நீங்கள் அறியாதபடியால்
E. லூக் 12 : 40 நீங்கள் நினையாத நேரத்தில்
F. வெளி 1 : 7 கண்கள் யாவும் அவரைக் காணும்
G. 1தெச 4 : 16 ஆரவாரத்தோடு வருவார்

**II.ஒரே உயிர்த்தெழுதல்**

A.யோவான் 5 :28 - 29 பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்
B.அப் 24 : 15 நீதிமான்களும், அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டென்று
C.1 தெச 4 : 16 - 18 கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.
D.1 கொரி 15 : 51 - 53 அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்.

**III.பூமியின் அழிவு**

A.2 பேது 3 : 7-12 இந்த பூமி அக்கினிக்கு இரையாக்கப்படும்
B.மத் 24 : 35 வானமும் பூமியும் ஒழிந்துபோம்
C.எபிரெயர் 1 : 10 - 11 அவைகள் அழிந்துபோம்.

**IV.பொதுவான நியாயத்தீர்ப்பு**

A. 2 கொரி 5 : 10 நாமெல்லாரும் கிறஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்
B.யோவான் 12 : 48 நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்
C.அப்போ 17 : 31 பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்.
D.2 தீமோ 4 : 1 **கர்த்தராகிய இயேசுகிறிஸ்து** உயிரோடிருக்கிறவர்களையும், மரித்தவர்களையும் நியாயந்தீர்ப்பார்.
E.ரோமர் 14 : 10-12 நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்
F.மத் 10 : 26 நியாயத்தீர்ப்பு

**V.நியாயத்தீர்ப்பிலே நடப்பவை (நியாயத்தீர்ப்பு, ஆசீர்வாதமும், தண்டனையும் )**

A.மத் 25 : 31- 46
B. வெளி 20 : 11-15

**VI.கிரியைகளுக்கான பலன்**

A.ரோமர் 2 : 6 தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனவனுக்கு பலனளிப்பார்.
B.லூக் 12 : 47 - 48 கிரியைகள்
C. 2 பேது 2 : 21, எபி 10 : 29

**VII.நித்திய அழிவு - நரகம்**

A.நியாயத்தீர்ப்பின் நாளில் நடப்பவை
B.சங் 9 : 7 நரகம்
C. 2 பேது 2 : 9 ஆக்கினைத்தீர்ப்பு
D. 2 தெச 1 : 9 நித்தியமான
E. மத் 24 : 50-51 அழுகை
F.வெளி 21 : 8 அக்கினியும் கந்தகமும்
G. லூக் 16 : 23 - 26 பாதாளத்தின் வேதனை

**VIII.நித்திய ஆசீர்வாதம் பரலோகம்**

A. நித்திய வாழ்வு
B.1பேது 1 : 4-5 ஜீவனுள்ள நம்பிக்கை
C. 2 கொரி 5 : 1 கைகளால் கட்டப்படாதது
D. எபிரெ 11 : 16 பரமதேசம்
E.வெளி 7 : 15 -17 பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை
F.வெளி 22

**முடிவு**

வெளி 22 : 20 இவைகளை சாட்சியாக அறிவிக்கிறவர் மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென் கர்த்தராகிய இயேசுவே வாரும்.

# கடைசிக்காலம்

## ஒருநோக்கு வேதாகம செய்தி


**வேதவசனமே நமது வழிகாட்டி**

**இயேசுகிறிஸ்து**வின் இரண்டாம் வருகையும், அதன்பின் நடைபெறும் நிகழ்வுகளும் மிகவும் முக்கியமானவைகள். கடைசிக்காலத்தைக் குறித்ததான பல தீர்க்கதரிசனங்களும், வேதவாக்கியங்களும் சொல்லப்பட்டுள்ளது. கடைசிக்காலத்தைப் பொறுத்தவரையில் நாம் யூகிக்க முடியாது (**டி.எஸ்.வார்னர்– D.S Warner**). அறிவார்ந்த, தத்துவ கோட்பாடுகளல்ல. வேதமே இதற்கு வழிகாட்டி. இயேசுகிறிஸ்துவின் வருகையையும், கடைசிகாலத்தையும் எதிர்கொள்ள நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். சகல ஜனங்களும் எழுப்பப்பட்டு, நியாயத்தீர்ப்புக்காக அவருக்கு முன்பாக சேர்க்கப்படுவார்கள். நித்திய ஜீவனும், நித்திய ஆக்கினைத்தீர்ப்பும் அவரே அருளுவார். இந்த உலகம் அழிக்கப்பட்டுப் போகும்.

**இயேசுகிறிஸ்து திரும்ப வருவார்**

இயேசுகிறிஸ்து தம் சீஷர்களிடம் நான் திரும்பி உங்களிடத்தில் வருவேன் என்றார் (யோவான் 14 : 3, 28). இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள் (அப்போ 1 : 11).

இரவிலே திருடன் வருகிறவிதமாய் கர்த்தருடைய நாள் வரும் (1தெச 5 : 2 ). ஒருவரும் நினையாத நாழிகையிலே வருவார்.



**நியாயத்தீர்ப்பு**

**முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் தேவனை அறிக்கை பண்ணும் ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்**

தீர்க்கதரிசிகள் அந்த நாளை அறிய முயற்சித்தார்கள். ஆனால் அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான் (மாற்கு 13 : 32). அந்த வேளையை அறியாததினாலே நீங்களும் ஆயத்தமாயிருங்கள் (லூக் 12 : 40).

**காலம் செல்லாது. காலம் நிறைவேறிற்று**

இயேசுகிறிஸ்து இந்த உலகத்தை முடிவுக்கு கொண்டுவரும் அந்த நாள் மகிமையும், மகா ஆச்சரியமுமான நாள். நீதியுள்ளவர்கள் களிப்பாயும், அநீதியுள்ளவர்கள் அழுது புலம்பி, இந்த பாறைகளும், மலைகளும் எங்கள் மேல் விழட்டும் என்பார்கள். இதோ மேகங்களுடனே வருகிறார். கண்கள் யாவும் அவரைக் காணும் (வெளி 1 : 7) . கர்த்தர்தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார் (1தெச 4 : 16). மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமைபொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார் (மத் 16 : 27).

**மரித்தோர் எழுந்திருப்பார்கள்**

இயேசுகிறிஸ்து வானத்திலிருந்து இறங்கி வரும்போது, மரித்தோர் யாவரும் எழுந்திருப்பார்கள். கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப்பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப் படுவோம் ( 1 கொரி 15 : 52 ). சிலர் நீதியுள்ளவர்களே மரித்தோரிலிருந்து எழுந்திருப்பார்கள் என போதிக்கிறார்கள். ஆனால் வேதம் சொல்லுகிறது நீதிமான்களும், அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டு (அப் 24 : 15). இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம். ஏனெனில் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும். அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள் (யோவான் 5 : 28 – 29).

**இந்த பூமி அழிந்துபோகும்**

வானமும், பூமியும் ஒழிந்துபோம் (மத் 24 : 35 எபி 1 : 10 – 11).

இப்பொழுது இருக்கிற வானங்களும், பூமியும் அந்த வார்த்தையினாலே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள் வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது (2 பேது 3 : 7). வானங்கள் மட மட என்று அகன்றுபோம். பூதங்கள் வெந்து உருகிப்போம். பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம். இப்படி இவைகளெல்லாம் அழிந்துபோகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும் ( 2 பேது 3 : 10–12).

**ஒவ்வொருவரும் கர்த்தருக்கு முன்பாக நிற்க வேண்டும்**

நியாயத்தீர்ப்புநாளிலே, பிதாவாகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்தை நியாயந்தீர்ப்பார். நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற **கர்த்தராகிய இயேசு கிறிஸ்து**வுக்கு முன்பாகவும் (2 தீமோ 4 : 1).

அந்தபடி முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் தேவனை அறிக்கைப் பண்ணும் என்று என் ஜீவனைக் கொண்டு உரைக்கிறேன் என்பதாய்க் கர்த்தர் சொல்லுகிறார். ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான் (ரோமர் 14 : 10- 12) . எல்லா சந்ததியும், எல்லா பாஷைக்காரரும், எல்லா தேசத்தாரும் அவருடைய நியாயத்தீர்ப்புக்கு முன்பாக நிற்கக் கடவோம். வெளியாக்கப்படாத மறைபொருளுமில்லை. அறியப்படாத இரகசியமுமில்லை (மத் 10:26).

### ஒரே நியாயத்தீர்ப்பு

மத்தேயு 25 : 31 - 46 லும் வெளி 20 : 11- 15 வசனங்களிலும் நியாயத்தீர்ப்பைக்குறித்த விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள்.




அவர்களை அவர் பிரித்து (மத் 25 : 32) மரித்தோராகிய சிறியோரையும், பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன். அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன (வெளி 20 : 12). நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும் (யோவான் 12 : 48) . ஏனென்றால் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும் (2 கொரி 5 : 10).

### கிரியைகளுக்குத்தக்க பலன்

நியாயத்தீர்ப்புநாளிலே நித்திய ஜீவனையும், நித்திய ஆக்கினைத்தீர்ப்பையும் **கர்த்தராகிய இயேசுகிறிஸ்து** அளிப்பார். இதோ சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது (வெளி 22 : 12). ஒவ்வொருவருடைய நித்திய முடிவும் அவரவருடைய கிரியைகளைக் கொண்டே தீர்மானிக்கப்படுகிறது. தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார் ( ரோமர் 2 : 6 ) .சத்தியத்தை அறியுங்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும். சத்தியத்தைக் கடைபிடிக்காவிடில் தேவ கோபாக்கினை உங்கள் மேல் வரும்.

தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்தும் ஆயத்தமாயிராமலும், அவனவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான். அறியாதவனாயிருந்து, அடிகளுக்கு ஏதுவானவைகளைச் செய்தவனோ சில அடிகள் அடிக்கப்படுவான். மனுஷர் எவனிடத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ அவனிடத்தில் அதிகமாய்க் கேட்பார்கள் (லூக் 12 : 47 - 48, 2 பேது 2 : 21, எபி 10 : 26 - 29, மத் 11 : 20 - 24).

### அநீதியுள்ளவர்கள் நித்திய ஆக்கினைக்கான நரகத்துக்கு செல்வார்கள்

கர்த்தர் அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளான வர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார் (2 பேது 2 : 9 ). துன்மார்க்கரும், தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும் நரகத்திலே தள்ளப்படுவார்கள் (சங் 9 : 17). நரகம் என்பது நித்திய அழிவாகிய தண்டனை ( 2 தெச 1: 9 ).இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் ( வெளி 21 : 8 ).இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர் : சபிக்கப்பட்டவர்களே என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக் காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள் (மத் 25 : 41 ). அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் ( மத் 24 : 51 ). ஆக்கினைத்தீர்ப்பிலிருந்து ஒருவராலும் தப்பமுடியாது.

### இரட்சிக்கப்பட்டவர்கள் என்றென்றும் பரலோகத்திலே வாசம் பண்ணுவார்கள்

நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் ( மத் 25 : 45 -46 ). அழியாததும் மாசற்றதும், வாடாததுமாகிய , சுதந்திரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது (1 பேது 1 : 4). தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான் (எபி 11 : 6, 2 கொரி 12 : 4). நீதியுள்ளவர்களுக்கென்று ஆயத்தம் பண்ணப்பட்ட புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்.எருசலேமாகிய பரிசுத்த நகரம் பரலோகத்தை விட்டு தேவனிடத்திலிருந்து இறங்கி வருகிறதை எனக்குக் காண்பித்தார் (வெளி 21, 22).

# கேள்விக்கு என்ன பதில்?

**கேள்வி : தேவராஜ்ய** அரசாட்சி இந்த பூமியில் நடைபெறுமா?

**பதில் : இயேசுகிறிஸ்து**வின் இரண்டாம் வருகைக்கு சம்பந்தமான மிகவும் தவறுதலான புரிதல்களுக்குட்பட்ட கேள்வி இது. இந்த கேள்விக்கு பதில் இல்லை.ஏனெனில் **தேவராஜ்ய** அரசாட்சி நடைபெறாது.


ஒவ்வொரு சபைகளிலும் இந்த **தேவராஜ்ய** அரசாட்சியைக் குறித்ததான வேறு வேறு விளக்கங்களுண்டு.என்னவெனில் இயேசுகிறிஸ்து இந்த பூமிக்கு திரும்பவும் வந்து **தேவராஜ்ய**த்தை ஏற்படுத்துவார் என்ற போதனைகளும் உண்டு.அவர்கள் தேவனாகிய **இயேசுகிறிஸ்து** எருசலேமை தலைமையிடமாகக் கொண்டு, நியாயத்தீர்ப்புக்கு முன்பதாக **தேவராஜ்யத்தைக் கொண்டு** இந்த பூமி முழுவதையும் அரசாட்சி செய்வார் என நம்புகிறார்கள்.

இது தேவராஜ்யத்தைக் குறித்தும், தேவனுடைய இரண்டாம் வருகையைக் குறித்தும் சொல்லப்படுகிற தவறான உபதேசம். **தேவராஜ்ய** அரசாட்சி என்பது இங்கே தேவையில்லை. **இயேசுகிறிஸ்து** ஏற்கனவே தம்முடைய ராஜ்யத்தை ஏற்படுத்தி வைத்திருக்கிறார். யோவான் 18 : 36 ல் இயேசுகிறிஸ்து கூறுகிறார் என் ராஜ்யம் இவ்வுலகத்திற் குரியதல்ல. என் ராஜ்யம் இவ்வுலகத்திற் குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப் படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே...

தேவனுடைய ராஜ்யம் எப்போது வருமென்று, பரிசேயர் அவரிடத்தில் கேட்டபொழுது, அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக : தேவனுடைய ராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது. இதோ இங்கே என்றும், அதோ அங்கே என்றும் சொல்லப்படுகிறதற்கும் ஏதுவிராது; இதோ தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே என்றார் (லூக் 17 : 20-22). தேவராஜ்யம் ஆவிக்குரியது.தேவனுடைய ராஜ்யம் புசிப்பும், குடிப்புமல்ல, அது நீதியும், சமாதானமும், பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமா யிருக்கிறது (ரோமர் 14 :17).

இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகையின் மூலம் அவருடைய விசுவாசிகளின் உள்ளத்திலே அது நிலைநாட்டப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிக நிச்சயமாமே ( ரோமர் 5 : 17 ). பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்.நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன் (யோவான் 17 : 4).

**வேத அடிப்படையில், இந்த பூமியில் தேவராஜ்ய அரசாட்சி தேவையில்லை. அந்த அரசாட்சிக்கு இனி காலம் செல்லாது.**



**தேவராஜ்ய அரசாட்சிக்கு இடமும் இல்லை.**

தாவீதின் சிங்காசனத்தில் அமர்ந்து, கடைசிநாட்களிலே தேவனாகிய **இயேசுகிறிஸ்து** இந்த பூமியை **தேவராஜ்ய** அரசாட்சி செய்வார் என்று தவறாக நம்பி எதிர்பார்க்க வேண்டாம்.பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே தாவீதின் சிங்காசனம் அழிக்கப்பட்டு விட்டது.தாவீதின் சிங்காசனம் என்பது இயேசுகிறிஸ்துவின் வல்லமைக்கும், ராஜாங்கத்திற்கும் அடையாளமாகச் சொல்லப்பட்டது. அவர் யூதருக்கு ராஜாவாக பிறந்தார் (மத் 2 : 2).

இயேசு கிறிஸ்து எருசலேமிற்குள் ராஜகம்பீரத்துடன் பிரவேசிக்கும்போது ஜனங்களெல்லாரும் ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினால் வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர். நம்முடைய பிதாவாகிய தாவீதின் ராஜ்யம் ஆசீர்வதிக்கப்படுவதாக! உன்னதத்திலே ஓசன்னா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள் (மாற் 11 : 9-10).

**இயேசுகிறிஸ்து திரும்ப வரும்போது தேவராஜ்ய அரசாட்சிக்கான காலம் செல்லாது**

மரித்தோர் ஒரேதரம் எழுந்திருப்பார்கள். நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன் (யோவான் 5 : 28 - 29 ; யோவான் 6 : 39 - 40, 44, 54 ). நீதிமான்களுக்கும், பாவிகளுக்கும் தனித்தனியே எழும்புதல் இல்லை. சகல ஜனங்களும் அவருக்கு முன்பாக சேர்க்கப்படுவார்கள் ( மத் 25 :31-34, 41, 46 ). அனைவருக்கும் நியாயத்தீர்ப்பு உண்டு.இது கடைசி நாளில் நடக்கும்.

**தேவராஜ்ய அரசாட்சிக்கு இடம் இல்லை**

2 பேது 3 :7,10 வசனங்களைப் பார்ப்போம். இப்பொழுது இருக்கிற வானங்களும், பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவ பக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்து போகும் நாள் வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்.அப்பொழுது வானங்கள் மட மட என்று அகன்றுபோம்.

பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்.இந்த வேதவாக்கியங்கள் நமக்குத் தெளிவுபடுத்துவது யாதெனில், இயேசுகிறிஸ்துவின் வருகையின்போது இந்த பூமி முழுவதும் அக்கினியால் அழிக்கப்படும்.இது இயேசுகிறிஸ்துவின் நியாயத்தீர்ப்புநாளிலே, அவர் திருடன் வருகிறவிதமாய் நினையாத நேரத்திலே வரும்போது நடக்கும்.

ஆகவே வேதத்தின் அடிப்படையில், **தேவராஜ்ய** அரசாட்சிக்கு நேரமுமில்லை. இடமுமில்லை. வரும் நாட்களில் ஒரு சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி காத்திருக்க வேண்டாம். ஏனெனில் இன்னொரு வாய்ப்பு இல்லை.இன்றே இரட்சணிய நாள்.இன்றே தேவராஜ்யத்தில் பிரவேசிக்க, நித்திய ஜீவனைப் பெற ஆயத்தப்படுங்கள்

**Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide**
**Indian Constitution Act 25th & 19(1) Section**
**TAMIL EDITION**

உங்களுக்குத் தெரியுமா?

**வேதவசனம் :** அப்போ 2 : 27 என் ஆத்துமாவை பாதாளத்தில் விடீர், உம்முடைய பரிசுத்தர் அழிவைக் காண வொட்டீர் (சங் 16 : 10 )

Hell என்கிற வார்த்தையானது Sheol என்கிற கிரேக்க வார்த்தை மற்றும் Hades என்ற எபிரேய வார்த்தையிலிருந்து வந்தது. அதன் அர்த்தம் கல்லறை, மரணம், பரிதபிக்கப்பட்ட ஆத்துமா .



இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்தபோது சாத்தானுடைய நரகத்துக்கு அவருடைய ஆத்துமா கொண்டு செல்லப்படவில்லை. மாறாக அவர் பரதீசுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்.

இயேசு சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவனை நோக்கி. “இன்றைக்கு நீ என்னுடனே கூட பரதீசிலிருப்பாய்” என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார் ( லூக் 23 : 43 ).

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி

**மத் 25 : 23 அவனுடைய எஜமான் அவனை நோக்கி : நல்லது உத்தமமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனே:கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய்: அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்.உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்.**

கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு முன்பதாக வந்து நிற்கும்போது எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்ற இந்த வார்த்தையைக் கேட்பது எவ்வளவு ஆச்சரியமானதாகும்.

தேவன் தம்முடைய ஜனங்களுக்காக ஆயத்தம் பண்ணி வைத்திருக்கிற அழகான பரலோகத்திலே துயரமில்லை, போராட்டமில்லை, வேதனையில்லை, ஏமாற்றமில்லை, விரக்தியில்லை, சோதனையில்லை.

பரலோகமானது தேவனுடைய பரிசுத்தவான்களின் பார்வைக்கு மிகவும் பிரகாசமுள்ளதாயிருக்கிறது. ஒருநாள் வரும்.அப்போது மரணமில்லை, துயரமில்லை,அழுகையில்லை, வியாதியில்லை, பெலவீனங்கள் ஒன்றுமில்லை,கோபமில்லை. பிரச்சனைகளில்லை. அந்த நாள் ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமாகிய அவருடைய பிரசன்னத்திலே மகிமையாகவும், சந்தோஷ களிப்பாகவும் மாறும்.சூரியனும் தன் ஒளியைக் கொடாதிருக்கும்.



மரித்தவர்கள் உயிரோடு எழுப்பப்படும்போதுதான் பூமிக்குரிய இந்த மாம்ச சரீரம்தான் அழிந்ததென்று அவர்கள் அறிந்துகொள்வார்கள். தேவனுடைய ஊழியக்காரர்கள் மகிமை பொருந்தினவர்களாய் உயிரோடு எழுப்பப்பட்டு பரலோகத்தின் நித்திய மகிமையின் பரிபூரணத்தை அடைவார்கள்.

உண்மையாகவும் உறுதியாகவும் தேவனிடத்தில் தரித்திருங்கள்.அவர் நிச்சயமாக விலையேறப்பெற்ற அந்த **பரலோகப் பாக்கியத்தை** உங்களுக்குத் தருவார்.

**தொடர்புக்கு:-**
**ஆசிரியர்,**
**காஸ்பல் ட்ருத்**
**2/227 - கோலார்பட்டி**
**பொள்ளாச்சி - வட்டம்**
**தென் இந்தியா - 642 107**

**The Editor,**
**Gospel Truth,**
**2/227 - Kolarpatti**
**Pollachi -Taluk**
**South India - 642 107.**

**Email :**
**editor@thegospeltruth.org**

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

**Tamil Editor** : **W.S.Vedha,2/227 Kolarpatti, Pollachi -Tk,South.India - 642 107.**
**Phone : 04259 - 280488 Cell: 95975 62641**
**Publisher** : **V.Jayanathan Gnanarajan,** **Mailing : V.Selvam, Despatch : V.J.Sam kirubaharan**
**Printer** : **Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316**